

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*


## பக்தியுள்ளவர்களை காத்திட, கர்த்தர் அறிந்திருக்கிறார்!

"பக்தியுள்ளவர்களை எப்படி காப்பது? என்று கர்த்தர் அறிந்திருக்கிறார்!" (2பேதுரு 2:9-NKJV). இதை விளக்கும்படியான 5-ம் வசனத்தில், பூர்வ முழு உலகத்திலும் நீதிமானாகிய நோவா குடும்பத்தின் 8-பேரை "ஜலப்பிரளயத்தில்" கர்த்தர் காப்பாற்றினார் என்றும்! 6 முதல் 8-ம் வசனத்தில் சோதோம் கொமோரா முழு பட்டணமும் "அக்கினியில் அழிந்தபோது" 'நீதிமானாகிய ஒரே ஒரு லோத்தை' கர்த்தர் எப்படி காப்பாற்றினார் என்றும்! கூறியபிறகே, 9-ம் வசனத்தில் இந்த ஆச்சரியமான 'பக்தியுள்ள, தம்முடையவர்களை' எப்படி காப்பது என கர்த்தர் அறிந்திருக்கிறார்! என்ற வாக்குதத்தம் நம் யாவரையும் பெலப்படுத்தி ஊக்குவிக்கிறது!

ஆகவே, தெய்வ பயத்துடன் பக்தியான வாழ்க்கை வாழும் உங்களுக்கு திடீரென்று 'வெள்ளம்' சூழ்ந்தால் என்ன? அல்லது 'அக்கினி பிரவாகம்' தாக்கினால் என்ன? அன்று நோவா குடும்பத்தை 'ஜலப்பிரளயத்திற்கும்' லோத்தை 'அக்கினிக்கும்' காத்த தேவன் உண்மையுள்ளவராய் நின்று, உங்களைக் காப்பார் என்பதை திடமாய் நம்பி நிலைநிற்கக்கடவோம்!

*-tr*

பெட்டகம் 38 | ஜுலை 2022 | பரல்கள் 07




## சிறந்த தலைவனைச் சார்ந்தே, சிறந்த சபை!

பரிசுத்தவான்கள் கூடும் சபைகளில் ஒரு சில கெட்ட மாதிரிகள் அவ்வப்போது தோன்றுவதால், உங்கள் சபையில் அமர்ந்துகொண்டு, அந்த தூய சபையை குறைந்த மதிப்பீடு வைத்து நீங்கள் பார்ப்பது உகந்த செயல் அல்ல! அவ்வித செயலை நீங்கள் செய்தால், வெகுசீக்கிரத்தில் உங்கள் சொந்த சபைகளில் 'நிறைய கெட்ட மாதிரிகள்' முளைத்து வருவதைக் காண்பீர்கள்! தேவன் பரிசுத்தப்படுத்தி வரும் ஒரு சபையை 'அசுத்தம்' என கூற பயந்திருப்போமாக!

உண்மையான ஓர் சபையின் வலிமை, அங்கு முன்னின்று நடத்தும் தலைவர்களைச் சார்ந்ததேயாகும்! அவர்களின் உத்தம முன்மாதிரி மூலமாய், சபையிலிருக்கும் உண்மையுள்ள விசுவாசிகள் மத்தியில் ஓர் மிகப்பெரிய ஆவிக்குரிய எழுப்புதலை நிச்சயமாய் தேவன் கொண்டு வருவார்! மிக விசாலமான வாசலை முன் வைத்து உலக சமரசத்திற்கும், அதின் மோகத்திற்கும் விட்டுக்கொடுத்து வாழும் ஒரு பெரிய சபைக்கு "தூய்மையான எழுப்புசல்" எக்காலத்தும் வராது! ஆனால் "இந்த உலகத்தில் உள்ள வேறு எதைக்காட்டிலும் தேவனுடைய பிரசன்னமும், அவரது ஆசீர்வாதமுமே மிக மேலானது" என வாஞ்சிக்கும் **'அந்த சிறிய சபையில்' தேவன் தன் எழுப்புதலை நிச்சயமாய் கட்டளையிடுவார்!**

உத்தம ஆவிக்குரிய தலைவர்களை இன்றைய சபைகள் இழந்து நிற்பதே, சபைக்கு ஏற்பட்ட பெரும் துயரம்! இந்த துயரத்தை மாற்றி அமைக்கும் 'நல்ல மாதிரி கொண்ட' தலைவர்களை நம் ஸ்தல சபைகளில் தேவன் எழுப்புவாராக!

*-Ed*


'பரலோக பொக்கிஷங்கள்' வருட சந்தா ரூ. 150.00

M.O *அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பவும். நன்றி!*

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
**G-Pay** : MADURAI CHRISTIAN FELLOWSHIP A/c No: 502087685 IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell : 9843049935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## துன்பத்தில் மறைந்திருக்கும் இனிய கீதம்!

*ஆபகூக் 3:17,18 வசனங்களை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கிறார்கள்! "அத்திமரம் துளிர்விடாமற் போனாலும்! திராட்சை செடிகளில் பழம் உண்டாகாமல் போனாலும்! ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும்! வயல்கள் தானியத்தை விளைவியாமல் போனாலும்! கிடையில் ஆட்டு மந்தை முதலற்றுப்போனாலும்! தொழுவத்தில் மாடு இல்லாமல் போனாலும்!* **நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்,** *என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்".*

*இந்த வசனங்களை சற்று நிதானமாய் உற்று கவனியுங்கள்: நம் வாழ்வில் என்னென்னவெல்லாம் துன்பத்தின் சோகங்கள் வருமோ, அத்தனையும் இங்கு எழுதப்பட்டுள்ளது. ஆனால், ஒரு மிகப்பெரிய ஆச்சரியம் என்னவெனில், இத்தனை கேடான சூழ்நிலையில்* **'வீரம் நிறைந்த விசுவாசம்'** *ஓர் மாபெரும் அறிக்கையாய் முழங்கியிருக்கிறது! ஆபகூக் கூறின இந்த வாசகங்களை சற்று விசாலமாய் விரித்துப் பாருங்கள்! அதுஎன்னவெனில்: "என்னுடைய பொருளாதாரங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து 'ஒருவேளை உணவுகூட' எங்காவது கிடைக்குமா? என்ற நிலை ஏற்பட்டது! நான் வீட்டைச் சுற்றி தேடி வந்தபோது, எல்லா அறைகளும் காலியாகவே இருந்தது! வயல்வெளி ஓடி, அங்கு தானியமாவது கிடைக்குமா என்று தேடினேன்..... அந்தோ, வயல்வெளியும் வாடிப்போய் கிடந்தது! ஒரு காலத்தில் தேவனுடைய அபரிதமான பலன்களை கண்டவன் நான்! அவைகள் எங்கே ஒழிந்துபோயின? ஒருவேளை கர்த்தர் தன் கோபத்தின் மிலாறினால் என்னை தண்டிக்கிறாரோ? எதுவாயிருந்தால் என்ன? .....* **நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதை விட்டு, ஒரு அங்கூலம் கூட விலக மாட்டேன்"** *என்பதாகவே விவரித்துக்கூறலாம்.*

*நான் முதலாவதாக எண்ணியதெல்லாம், இந்த விலையேறப்பெற்ற அழகிய வார்த்தைகள் "என்றென்றும் நிலைநிற்க கூடிய கற்பாறையில் வைரத்தால் எழுதப்பட*

*வேண்டும்!" என்றே யோசித்தேன். ஆனால், அதைவிட மேலாய், தெய்வ கிருபையின் மூலமாய் இந்த வார்த்தைகள் நம்* **ஒவ்வொருவருடைய இருதயங்களிலும்** *எழுதப்படுவதே பாக்கியம்! என உணர்ந்தேன். 'இரத்தின சுருக்கமாய்' கூறப்பட்ட இந்த வசனங்களில் முக்கியமான சில விஷயங்கள் மறைந்திருக்கின்றன: அது என்னவெனில்,*

**1. துயரமான அந்த நாளில், அவன் தேவனிடம் ஓடி அண்டிக்கொள்வான்!**

**2. கொடிதான அந்த வேளையில் "தன் உள்ளான அமைதியை" நிலையாக காத்துக் கொள்ள நாடுவான்!**

**3. சூழ்ந்து நிற்கும் துன்பத்தின் நடுவில் நின்று கொண்டிருக்கும் அவன், தேவனோடு களங்கமில்லாத மகிழ்ச்சியை காத்துக்கொள்வான்!**

**4. தன் ஆண்டவரிடமிருந்து புறப்பட்டு வரும் விடையைப் பெறும்படி, எதிர்பார்த்து காத்திருப்பான்!**

*ஆ இதுவன்றோ, வீரம் நிறைந்த நம்பிக்கை! புகழ்மிக்க விசுவாசம்! வீழ்ந்து போகாத தெய்வ அன்பு!*

*தேவனோடு இசைந்து வாழ்ந்த புனித சகோதரி எபன் அவர்கள், தான் கண்ட ஓர் இயற்கை காட்சியை அழகுபட விவரித்தார்கள்: "அன்று பெரும் மழை பெய்தது! நான் கதவைத் திறந்து பார்த்தபோது, ஓர் அழகிய ராபீன் குருவி மழையில் நனைந்துகொண்டே இனிய பாடல் ஒன்று பாடியது! அந்த குருவி எனக்கு ஒரு முக்கிய பாடத்தை கற்றுக்கொடுத்ததைப்போல் உணர்ந்தேன். 'மழைத்துளி' ராபீன் குருவியின் மீது கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்து விழுந்து கொண்டே இருந்தது. 'பாவம், இவ்வளவு நனைக்கிறதே' என நான் ஒரு பக்கம் எண்ணினாலும், ராபீன் குருவியோ தனது பாடலின் இசையை இன்னும் அதிகமாய் தலையை உயர்த்தி பாடிக்கொண்டே இருந்தது. ராபீன் குருவியை உற்றுபார்த்துக்கொண்டிருந்த என் உள்ளத்திலோ ஓர் பரவசம் ஏற்பட்டதைக் கண்டேன். என் வாழ்வில் துன்பங்கள் அதிகரித்தவுடன் 'மகிழ்ச்சியின் பாடல்' என்னிடம் நின்று போனதை பார்த்திருக்கிறேன்.*

**ஆனால், துன்பம் வந்தால் என்ன?..... அது அதிக அதிகமாய் கூடிக்கொண்டே போனாலும் என்ன? என்னுடைய மகிழ்ச்சியின் பாடலை நான் நிறுத்திக்கொண்டது நியாயமல்ல என உணர்ந்தேன்!**

*எங்கள் மலை பிராந்தியத்திற்குப் பின்னால் அமைந்திருக்கும் பசுமையான வனப்பகுதியில், 'மழை பெய்து கொண்டிருக்கும்' இந்த நேரத்தில், சூரியன் இப்போதுகூட பிரகாசித்துக் கொண்டுதானே இருக்கிறது! இனியும் என்னுடைய பிரகாசமான மகிழ்ச்சியை ஒருபோதும் இழக்கமாட்டேன், என உறுதி செய்து கொண்டேன்!*

மேலும், துன்பத்தை மகிழ்ச்சியான இருதயத்தோடு பாடி சந்திப்பது 'இருதயத்தின் பாரத்தை இலகுவாக்கும்' என்பதையும் உணர்ந்தேன்! மழைத்துளிபோல், கண்ணீர் துளிகள் பெருகப் பெருக, பாடலின் இனிமையும் 'மெல்லிய ராகமாய்' மாறிடும் பாக்கியத்தையும் கண்டேன்!

இப்போது நான், இன்னமும் மழையில் நனைந்து கொண்டிருக்கும் ராபீன் குருவியிடம் பேசினேன்: "என் அன்பு ராபீன் குருவியே, அதிகமாய் நனைந்த உடலை இறக்கையால் சிலிர்த்து உலுப்பிக்கொண்டே இனிய பாடலை தொடர்ந்து பாடிடும் உன்னிடமிருந்து இன்று, நல்லதொரு பாடம் கற்றுக்கொண்டேன்:

**உன்னுடைய இனிய ராகம், மெல்லிய வசந்தத்தை உன்னைச் சுற்றியும், என்னையும் சுற்றி வந்து மகிழச்செய்து விட்டது!**

இன்றுமுதல், எப்போதெல்லாம் காரிருள் சூழ்ந்த புயல் வீசுகிறதோ, அதுவே நான் இனிய கீதம் பாடும் நேரம் என்பதை உணர்ந்து கொண்டேன்! "பாடம் கற்றுக்கொடுத்த ராபீன் சிட்டுக் குருவியே, உனக்கு நன்றி!" என்றே, ராபீன் குருவியின் செயலை, புனித சகோதரி எபன் ஓர் கவிதையாக குறிப்பிட்டு எழுதினார்கள்! அந்த 'இனிய கீதம்' இப்போது நம் யாவருக்கும் சொந்தமாகட்டும்! ஆமென்.

- *Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## நிஷ்டூரமான பொறாமை, நமக்கு வேண்டாம்!

**கோ**பம் உண்டாவதற்குரிய சந்தர்ப்பம் அடிக்கடி நிகழமுடியும். உங்களுக்குப் பிடித்தமில்லாத ஒன்றை யாரோ பேசிவிட்டால் அல்லது செய்துவிட்டால் கோபம் உடனடியாக ஏற்பட்டு விடுகிறது. ஆனால், பொறாமை கோபத்தைப்போல் உடனடியாக ஏற்படுவது அல்ல..... அது தன்னை ஒளித்துக்கொள்ளும் பாவம்! கோபம் கொள்பவன் சூரிய அஸ்தமனத்திற்குள்ளாகவே சரிசெய்துகொள்ள முடியும். துரதிருஷ்ட மாக 'பொறாமை' உடனுக்குடன் வெளிப்படாமல் மறைந்திருக்கிறது.

*பொறாமையும் (Envy) காய்மாரமும் (Jealousy) இரட்டை சகோதரிகள் போல! காய்மாரம் கொள்வது உலகப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டது. தன்னிடமில்லாத ஒரு பொருளை ஒருவர்வைத்திருப்பதைக்கண்டு, தன்விருப்பத்திற்குகிட்டாதஒன்றை மற்றவர் பெற்றிருப்பதைக் கண்டு, இவ்வாறு உலகப்பொருட்களின் மீது ஏற்படுவதே காய்மாரம் (Jealousy). ஆனால் பொறாமையோ, பெரும்பாலும் ஆவிக்குரிய தொடர்புடையதாயிருக்கிறது. காய்மாரமாவது சீக்கிரத்தில் வெளிப்பட்டு விடும், ஆனால் பொறாமையோ ஆழமாய் மறைந்திருக்கும். ஆகவே, அது*

*வெளிப்படையாய் தோன்றுவதில்லை! எனவே பொறாமையை பெற்றவன், அதைத் தன்னோடு வைத்துக்கொண்டு சுகமாய் தூங்கிக் கொண்டிருப்பான். அதை வைத்து, அவன் விடுதலையாய் வாழ்கிறான் என நாம் எண்ணிவிட இயலாது! என்று தன் சந்தர்ப்பதற்குரிய வாய்ப்பு கிட்டுகிறதோ, அப்போது இந்த பொறாமை பூதகரமாய் வெளிப்படும்!*

உதாரணமாய், எழுப்புதல் காலத்தில், ஒருவர் தன்னை விட அதிக எழுப்புதல் அடைந்தால், ஒருவர் தன்னைவிட தேவனை கிட்டிச்சேர்ந்து விட்டால், ஒருவர் தன்னைவிட வரம் பெற்றுவிட்டால், ஒருவர் தன்னைவிட அதிகம் புகழப்பட்டால், ஒருவர் மிகுந்த உற்சாகத்தோடு தன் ஜெய வாழ்க்கையை சாட்சி பகர்ந்துவிட்டால், இங்குதான் 'பொறாமை' ஒருவனுக்குள் பிரவேசிக்கும் சோதனை ஏற்படுகிறது! யாராயிருந்தாலும், இந்த நிலை எல்லோருக்கும் ஏற்படமுடியும். இச்சமயத்தில் 2-தெரிந்தெடுத்தல் உங்களுக்கு காத்திருக்கிறது. ஒன்று, நீங்கள் வீழ்ச்சியடையலாம்! அல்லது மேற்கொள்ளலாம்! எப்படியாகிலும் இந்த இரண்டில் ஒன்றைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உங்களுக்கு ஏற்படுகிறது. யோசேப்பு புகழப்பட்டபோது "கோத்திர பிதாக்கள் பொறாமை (Envy) கொண்டு யோசேப்பை எகிப்திற்கு கொண்டு போகும்படியாக விற்றுப்போட்டார்கள்" என ஸ்தேவான் குறிப்பிட்டார் (அப்.7:9). வேதபாரகர்களும் பரிசேயர்களும், பிரதான ஆசாரியர்களும் இயேசுவின் மீது பொறாமை கொண்டனர். அது ஏனென்றால், அவர்களைவிட அவர் அதிகாரத்தோடும் வல்லமையோடும் பேசினார். அவருடைய வார்த்தைகள் ஆசீர்வாதமாய் இருந்தன.

**இவரைப்போல் எந்த மனிதனும் பேசியது இல்லை என ஜனங்கள் கூறினார்கள்! இதனால் ஏற்பட்ட பொறாமையை அவர்கள் சேர்த்து சேர்த்து வைத்து, ஒரு நாளில் அவரை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்துவிட்டார்கள்!**

பொறாமையில் விழும் ஒரு நபர், ஆழமான இருளுக்குள் விழுந்து தடுமாறி தத்தளிப்பார்! தான் செய்வது இன்னதென்றே அவருக்குத் தெரிவதில்லை. ஆகவேதான் தங்களால் இயன்ற மோசமான செயல்களை செய்யத் தொடங்குவார்கள். இருளில் இருப்பவன் என்ன குற்றச்சாட்டை கூற முடியும்? 'பல வருடங்களுக்கு முன்பாக' அவர் இதைச் செய்தார், அதை செய்தார் என புலம்புவார்கள். இந்த குற்றச்சாட்டுகளின் நோக்கம் என்ன? யார்மீது இவர்கள் பொறாமை கொண்டார்களோ, அவர் தன் பெலனையும் தைரியத்தையும் இழந்து,

*முன்பு போல் தேவனுடைய கிருபையையும், அவர் தந்த ஜெயத்தையும் பேசமுடியாமல்,* **அவரை பெலன் குன்றி போகச் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கமேயாகும்.** *இது முழுமையான இருள் அல்லவா?*

*பொறாமை கொண்டவர்கள், மாம்சத்தின் கிரியையைச் சொல்ல முடியாவிட்டாலும், அந்த ஆசீர்வதிக்கப்பட்ட சகோதரனின் சரீரத்தின் செயல்களை குற்றம் சொல்லத் தொடங்குவார்கள் (ரோமர் 8:13). சரீரத்தின் செயல்களென வேதம் கூறுவது நம்மில், சிறந்த ஆவிக்குரியவர்கள் கூட தங்கள் செயல்களில் தவறும் சில பகுதிகளேயாகும்! இவ்வாறு சாதாரணமான அற்ப காரியத்தை கூட இவர்கள் ஏன் குற்றம் கூறினார்கள்? அதுஏனென்றால், வேறு எந்த சிறந்த காரணமும் அல்ல, மாறாக அந்த உத்தம சகோதரனை பெலஹீனப்படுத்தி, தைரியத்தைக் குறைத்து, கனவீனப்படுத்தி, அவர் இனியும் தேவனுக்குள் பெலன் கொண்டிராதபடி செய்வதற்கேயாகும்! பொறாமை கொண்டவன் இவ்வளவாய் மதியீனம் கொண்டவன். இவர்கள் எதை குறை என்று சொன்னார்களோ, அவைகளை குறை என தேவன் கண்டதில்லை. "பொறாமை எங்கிருக்கிறதோ" அங்கேயிருந்து விளையும் தீமையும் மதியீனமும் 'அளவில்லாமல்' இருக்கும்! ஆகவே உங்களைவிட சிறந்த வெற்றியை அல்லது சாதனையை நிறைவேற்றியது குறித்து ஒருவர் சாட்சி கூறினால், அதை கேட்கும் நீங்கள் மூன்று விதமாய் பிரதிபலிக்கலாம்:*

*1) மெய்யாகவே அந்த சகோதரன் தெய்வ அனுக்கிரகம் பெற்றவர். "நானோ, ஒன்றுக்கும் உதவாத நிர்ப்பந்தமானவன்" என்ற பிரதிபலிப்பு! இச்சமயத்தில் தாழ்மையோடும் பக்தியோடும் இருப்பதுபோல் தோற்றமளித்தாலும், நீங்களோ* "**அவிசுவாசத்தினால்**" *பாதிக்கப்பட்டீர்கள்.*

*2) மற்றொரு நபரின் நற்சாட்சியை கேட்ட நீங்கள் 'உங்கள் மனதில் இருளடைந்து' போற்றுதற்குரிய அந்த நபரிடம், எப்படியாகிலும் குறைகண்டு அவரைத்தாக்குவதற்கு சிந்திக்கத் தொடங்குவீர்கள். இதுவே அதிக மோசமான நிலை. நீங்கள் இப்போது அகங்காரத்தாலும், அவிசுவாசத்தாலும் நிறைந்தது மாத்திரமல்லாமல் 'பொறாமையினால்' ஆட்கொள்ளப்பட்டீர்கள்!*

*3) "அந்த சகோதரனைக் குறித்து நல்ல சாட்சியை நீங்கள் கேட்டவுடன், அதனிமித்தம் அதிக மகிழ்ச்சி அடைகிறீர்கள்! அதிக உற்சாகமடைந்த நீங்கள், அந்த சகோதரனுக்கு தேவன் இத்தனை வல்லமையான காரியம் செய்தால், அதை எனக்கும் செய்வார்" என்பதே நீங்கள் அடைந்த உற்சாகம்! இப்போது நீங்கள், மன*

விசாலமும் தாழ்மையும் கொண்டவராய் மாத்திரமல்ல, விசுவாசத்தின் நிறைவினால் 'பொறாமை என்ற தீய குணத்தை' வெகு தொலைவில் வைத்து, புறக்கணித்து தள்ளிவிட்டீர்கள்! ஆ, இதுவே நம் நெஞ்சில் பொறாமை குடிகொள்ளாதிருக்க நாம் யாவரும் கைக்கொள்ளக்கூடிய தெய்வீகமான பிரதிபலிப்பாகும்!

*"உக்கிரம் கொடுமையுள்ளது! கோபம் நிஷ்டூரமுள்ளது! பொறாமையோவென்றால், அதற்கு முன்னிற்கத்தக்கவன் யார்?" (நீதி.27:4). உண்மைதான், பொறாமைக்கு முன்பாக நிலை நிற்பது அதிக கடினம். நீங்கள் தியாகமான அன்பில் உங்கள் சக சகோதரர்களை, அவர்களின் ஆவிக்குரிய நன்மைக்காக பெலப்படுத்தும்படி அன்பின் ஊழியம் செய்யும்போது "***பொறாமையின் புயல்*** *உங்களை கொடூரமாய் தாக்கினால், நீங்கள் கர்த்தருடைய பார்வையில் செய்யும் ஊழியத்தை நிறுத்திக் கொள்ள சோதிக்கப்படுவீர்கள் என்பது உண்மை!". ஆகிலும்,* ***பரிசுத்த ஆவியின் நிறைவில்*** *போதுமான அளவு வல்லமையும், ஞானமும், அன்பும் நிறைவாய் உள்ளது. ஆகவே நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தால், நிஷ்டூரமான கோபத்திற்கு முன்பாக மாத்திரமல்ல, பொறாமையையும் எதிர்கொண்டு நிலை நின்றிட முடியும்!*

1கொரிந்தியர் 12:26-ம் வசனத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட ஓர் தெய்வீகமான செயல் கூறப்பட்டுள்ளது. அது என்னவெனில் "ஒரு அவயவம் மகிமைப்பட்டால், எல்லா அவயவங்களும் அந்த அவயவத்தோடு சந்தோஷப்படும்!" என்பதேயாகும். இந்த நிலையில் மாத்திரமே, 'பொறாமை' ஒரு துளியாயினும் நம் இருதயத்தில் தங்காது! இந்த வசனத்தில் காணப்படும் விலையேறப்பெற்ற தெய்வ கிருபையை நம் யாவருக்கும் தேவன் அருள்செய்வாராக. ஆமென்.

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## வேதவாக்கியங்களை தவறாய் பயன்படுத்துதல் கூடாது!

இந்த உலகத்தில் உள்ள எல்லா புத்தகங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எந்த புத்தகத்தைப் பார்க்கிலும் அதிகமாய் கோடிட்டு சொல்லப்படும் புத்தகம், வேதப்புத்தகம் மாத்திரமே! அதுபோல, எந்தப் புத்தகத்தைப் பார்க்கிலும் அதிகமாய் தவறாய் புரிந்து கொள்ளப்படும் புத்தகமும், வேதப்புத்தகம் மாத்திரமே! **கடைசியாக எந்தப் புத்தகத்தைப் பார்க்கிலும் அதிக அளவில் தவறாய் கோடிட்டு பேசப்படும் புத்தகமும், வேதப்புத்தகம் மாத்திரமே!** இவ்வாறு வேதவாக்கியங்கள் தவறாய் பயன்படுத்துவதற்கு முக்கிய காரணம் "வேதப் புத்தகம் எல்லோருக்கும்

*பாகுபாடற்ற முறையில் அருளப்பட்டுள்ளது!'' என்ற பிழையான எண்ணமேயாகும். சகலத்தையும் பகுத்து யோசித்திடும் ஒருவராகிலும் இவ்வித வஞ்சகத்திற்குள் விழமாட்டார்கள்.*

*தேவனுடைய வார்த்தைகள் 'குறிப்பிட்ட மக்களுக்காகவே' வழங்கப்பட்டதாகும். அதாவது 'இரட்சிக்கப்பட்டு' தேவனோடு உறவு வைத்துக்கொண்டவர்களுக்காகவே அருளப்பட்ட புத்தகமாகும்!*

**தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு செய்த "வாக்குத்தத்தமான உடன் படிக்கைகளை" புறஜாதி தேசத்தார், அவைகளை தங்களுக்கென சுதந்தரித்துக்கொள்ள முடியாதல்லவா!**

*வாக்குதத்தங்களும் அதன் நிச்சயமான சுதந்தரிப்புகளும் மனம்திரும்பிய விசுவாசிகளுக்கே அல்லாமல், அவிசுவாசிகளுக்கோ, சன்மார்க்கத்தாருக்கோ அல்ல!*

*இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தம் நிறைந்த ஓர் வசனமே "ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:13) என்ற வசனம். இந்த வசனத்தை யார் யாரோவெல்லாம் தங்களுக்கு ஏற்றப்படி பயன்படுத்துகிறார்கள். காவல் துறையில் உள்ள ஒரு போலீஸ், தன் கடமை ஆற்றுகையில், உயிர் இழக்க நேர்ந்தால் அதற்கு இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறார்கள்! மருத்துவத் துறையில் உள்ள ஒரு மருத்துவர், சுரங்க விபத்தில் சிக்கியவர்களுக்கு பணியாற்றுகையில், தவறி விழுந்து மரித்துவிட்டால், அவருக்கும் இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறார்கள். இவ்வாறு, எந்த மனுஷனாகிலும் எதற்காகவும் மரித்தால்*"**அவரை தூய்மைப்படுத்தி அலங்கரிக்கும் வசனமாக**" *இயேசுவின் இந்த வசனத்தை பயன்படுத்துகிறார்கள். இப்படியெல்லாம் வசனங்கள் கோடிட்டு காண்பிக்கப்படுவதைப் பார்த்து, பாவத்தில் வாழும் ஒரு கிறிஸ்தவன், 'தன்னை சமாதானப்படுத்த' வசனங்களை காண்பித்து, 'பாவத்தோடு' புன்னகை பூக்கிறான்.*

*கிறிஸ்துவோ, இந்த வசனத்தில் தன்னையும், தான் நெருங்கி அனுபவிக்க இருந்த* **சிலுவை பலியையும் முன்வைத்தே** *இந்த வசனத்தைக் கூறினார். இந்த தூய கருத்து, மிகத்தெளிவாகவே அந்த வசனத்தில் இருக்கிறது. அதற்குப் பதிலாய், இந்த வசனத்தை வேறு விதமாய் பயன்படுத்தினால், அதை நம்முடைய சுய ஆக்கினைக்காகவே பயன்படுத்திய* **துன்மார்க்க செயலாகவே** *இருக்கும்!*

*இன்னும் கொஞ்சம் அதிகமாய் 'ஆவிக்குரிய மையப்பகுதியையே தொட்டு' அதை தவறாய் கையாளும் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். அமெரிக்க தேசத்து இல்லினோஸின் முன்னாள் கவர்னர் ஸ்டீபன்சன்*

*அவர்கள், ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளராய் நிற்பதற்கு வலியுறுத்தப்பட்டார். அதற்குரிய மனுவை தாக்கல் செய்வதா வேண்டாமா என்ற குழப்பத்தில், ஸ்டீபன்சன் அவர்கள் தன் பெயரை தாக்கல் செய்வதற்கு அதிக தயக்கம் காட்டினார். அச்சமயத்தில், அவரிடம் சென்ற அநேகர் மத்தேயு 26:39-ம் வசனத்தை கோடிட்டு காண்பித்தார்கள்: "என் பிதாவே, இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்க கூடுமானால் நீங்கும்படிச் செய்யும். ஆகிலும், என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்ற வசனத்தை கூறி "ஜனாதிபதி தேர்தலுக்குரிய" தீர்மானத்தை உறுதி செய்வதற்கு,* **விலையேறப்பெற்ற இயேசுவின் வசனத்தை** *தவறாய் பயன்படுத்தினார்கள்!*

*ஓர் உண்மையான தேவனுடைய பரிசுத்தவான், தன்னுடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கும்படி, தன் இரட்சகர் உரைத்த இந்த வசனத்தைப் பயன்படுத்தி* **தேவசித்தம் அறிய** *மன்றாடுவதில் யாதொரு பிழையும் இல்லை.....*

**ஆனால், தங்களின் அரசியல் லாபத்திற்காகவும், தங்களுடைய சொந்த லாபத்திற்காகவும், மற்றும் இதுபோன்ற தங்கள் சுய வழி செல்வதற்காக கர்த்தருடைய தூய வார்த்தையை தவறாய் பயன்படுத்துவது, எவ்வளவு அபாயகரமானது என்பதை உணரக்கடவோம்!**

*ஒரு இளம் வாலிபன், தன் பிராயத்தில் 'ஏராளமான வசனங்களை மனப்பாடமாய்' அறிந்து வைத்திருந்தான். அதைக்குறித்து அவன் பெருமை கொண்டது மாத்திரமல்லாமல், தன் அகங்காரத்தில், தான்தோன்றித்தனமான தீய வாழ்க்கையும் வாழ்ந்து வந்தான். தன் பாவ கசப்பில் வாழ்ந்த அவன், ஒருநாள் ஆழமாய் மனந்திரும்பி, இரட்சகரை தேடும்படி கிறிஸ்து இயேசுவிடம் வந்தான். பரிதாப பாவநிலையில் அவன் இருந்தாலும், விசுவாசத்தைப் பற்றிக்கொண்டு, தேவனிடம் கதறி ஜெபித்து தேடினான். தன்னைத் தேடுகிற யாவருக்கும் தன்னை மறைத்துக்கொள்ளாத ஆண்டவர், அவனைத் தொட்டு ஜீவன் தந்தார். மகத்துவமான இரட்சிப்பைக் கண்டடைந்த அந்த வாலிபன், தன் நிலைமையை இவ்வாறு விவரித்தான்: "நான் கண்ணீரோடு கர்த்தரைத் தேடிய நாட்களில், நான் மனப்பாடமாய் அறிந்து வைத்திருந்த வேத வசனங்களை நினைவிற்கு கொண்டு வர எவ்வளவோ முயற்சித்தேன். ஆனால், நான் அறிந்த எல்லா வேத வாக்கியங்களும் என்னை விட்டு விலகிச் சென்றதைக் கண்டேன்! முடிவாக, நான் கர்த்தரை தீவிரமாகத் தேடியபடியால், ஒரே ஒரு வேத வாக்கியம் மாத்திரம் என் நினைவில் வந்து நின்றது: "மனுஷரால் இது கூடாததுதான்! தேவனாலே எல்லாம் கூடும்!" என இயேசு மத்தேயு 19:26 ம் வசனத்தில் கூறிய சத்தியம் என்*

இருதயத்தை உடைத்து, என்னை மனம் திரும்பச் செய்தது!" என, அந்த வாலிபன் கண்ணீரோடு சாட்சி கூறினான்.

**ஒரு மனிதன் தேவனிடத்தில் சாந்தமுள்ள மனத்தாழ்மையோடு வரும்போது, அவனுடைய 'ஆத்துமாவில் சத்தியத்தை வைத்து' கிரியை செய்திடும் உரிமை பரிசுத்த ஆவியானவருக்கு மாத்திரமே உண்டு.**

அப்படியில்லாமல், தேவனிடமோ அல்லது பயபக்தியோ இல்லாமல், வேதாகமத்திலுள்ள வாக்கியங்களை தவறாய் பயன் படுத்துபவர்கள் யாராயிருந்தாலும், அது அவர்களுக்கு எந்த பயனும் அளிக்காது! அதுமாத்திரமல்ல, வேதவாக்கியம் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாயிருக்கிறபடியால், அது அவனுக்கு, சுகம் பெறமுடியாத தீங்கை கொண்டு வந்துவிடும்! என்பதை எச்சரிக்கையாய் எடுத்துக்கொள்ளக்கடவோம்!

- A.W.டோசர்

---

## உடன் ஊழியர்களின் தீது கண்டு மனம் வருந்தினேன்!

சில நாட்கள் கழித்து, தந்தை லா - கோம்பே அவர்கள் விசேஷித்த கூட்டங்கள் நடத்தும்படி 'ஜெக்ஸில்' (GEX) உள்ள எங்கள் மடத்திற்கு வந்தார்கள். இங்கு அவர் மூன்றாவது தடவையாக வந்திருக்கிறார் எனக்கூறினார்கள். ஆனால் உண்மையில், இதுவே அவரது கடைசி வருகையாகவும் மாறியது! இங்குள்ள மடத்து தலைவியார் என்னோடு கொண்டிருந்த உறவை, அவர்களாகவே முறித்துக் கொண்டபடியால், தந்தை லா - கோம்பே மடத்திற்கு வருவதற்கு முன்பாகவே 'என்னைப்பற்றி' ஓர் நீண்ட கடிதத்தை அவர்களுக்கு எழுதி அனுப்பினார்கள். அதற்கு அவர் எழுதிய பதிலை மடத்து தலைவியார் என்னிடம் காண்பித்தார்கள். "இந்த ஜெனிவா கான்வென்ட்டில், மேடம் குயானும், மடத்து தலைவியாக மாறி விடுவார் என்று நம்புகிறேன்" என நான் எழுதியிருந்தேன் என கூறினார்கள். ஆனால் அவரோ, மிக நேர்மையான பதிலாக: "மேடம் குயான், ஜெனிவாவில் நிரந்தரமாய் இருக்க மாட்டார்கள் என, நமது ஆண்டவர் எனக்கு காண்பித்துள்ளார்" என அவர் எழுதிய வாசகத்தையும் எனக்கு காண்பித்தார்கள். இந்த நிலையில் அவர் வருகை தந்தவுடன், அவர் மீதும் என் மீதும் மடத்து தலைவி அதிக கோபமாயிருந்தார்கள்.

அதே கோபத்தோடு, நான் முன்குறிப்பிட்ட பிரசங்கியாரிடம் சென்று, ஆலோசனைகள் பலசெய்து "ஒன்று, நான் என்னை மடத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுத்து மாற வேண்டும் அல்லது நான் மடத்தை விட்டு விலக வேண்டும்" என்ற உறுதிப்பாட்டை இருவரும் சேர்ந்து

*தீர்மானித்துக்கொண்டார்கள். காரியம் என்னவென்றால், "நான் என்னை முற்றிலுமாய் மடத்திற்கு ஒப்புக்கொடுத்து, என் மீதமுள்ள ஆஸ்திகளையெல்லாம் நான் மடத்திற்கு தந்துவிடுவேன்" என நம்பியிருந்தார்கள். தனிமையாயிருக்கும் நான், மடத்தை விட்டுப் போக மாட்டேன் என்றும் கருதினார்கள்!*

*இதையெல்லாம் மனதில் வைத்தே, தந்தை லா - கோம்பே அவர்களையும் தங்கள் திட்டத்திற்குள் ஈர்த்துக்கொள்ள முயற்சித் தார்கள். ஆகவேதான், விசேஷ கூட்டத்தை ஏற்படுத்தி அவரை தலைமை பிரசங்கியாராய் நியமனம் செய்தார்கள். அவர் பிரசங்கித்த கூட்டங்களுக்கு தலைப்பாய் "***ராஜ குமாரத்தி 'தனக்குள்' அழகுள்ளவள்***" என்ற தலைப்பில் பிரசங்கித்தார். பிரசங்கங்களை கேட்ட மடத்திலிருந்து பிரசங்கி 'தனக்கு எதிராகவே பிரசங்கிக்கிறார்' என்பதாக மனச்சாட்சியில் குத்தப்பட்டார். ஆகவே, லா-கோம்பே அவர்களின் பிரசங்கத்தில் ஏராளமான பிழைகள் இருப்பதாக, அநேக குறிப்புகளை தீமையாக கோடிட்டு, ரோம் நகரிலுள்ள தூய - ஆலய தலைமையகத்திற்கு அனுப்பி வைத்தார். அதைக் குறித்து விசாரிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்! இவ்வளவு தீமையாக அவர் எழுதிய போதும், ரோம் ஆலய செயற்குழுவினர் தந்தை லா - கோம்பே பிரசங்கித்த யாதொன்றிலும் எந்தப் பிழையும் இல்லை! என பதில் அனுப்பி விட்டார்கள். இதனிமித்தம், அந்தப் பிரசங்கி ஏமாற்றம் அடைந்தது மாத்திரமல்லாமல், இன்னும் அதிகமாய் கோபம் பொண்டார்.*

**தந்தை லா - கோம்பே தங்கியிருந்த நாட்களெல்லாம் தீமை மொழிகளை இந்தப் பிரசங்கி அவருக்கு எதிராகப் பேசினார். இவ்வளவு கசப்பான மொழிகளை இந்தப் பிரசங்கி சாடுவார் என நான் எதிர்பார்க்கவில்லை!**

*ஆனால், தந்தை லா - கோம்பே அவர்கள், பதிலுக்கு யாதொன்றும் பேசாமல், தனக்கே உரிய மென்மையான தாழ்மையோடு, தூரத்திலுள்ள தன்னுடைய தனிமை அறைக்கு செல்வதாகக் கூறி அங்கிருந்து போவதற்கு ஆயத்தமானார். மேலும் அந்த பிரசங்கியிடம் "ஜெனிவா பிஷப்பிற்கு தாங்கள் கடிதம் தரவேண்டுமானால் நான் அதை எடுத்துச் செல்லுகிறேன்" என வினவினார். அதற்கு அந்த பிரசங்கி "அப்படியானால் காத்திருங்கள்" என கூறினார். நல்ல உள்ளம் கொண்ட தந்தை லா - கோம்பே அவர்கள், பல மணி நேரம் கடிதத்திற்காக காத்திருந்தார். நீண்ட நேரம் காத்திருந்து பகல் நேரம் கடந்து விட்டப்படியால், அங்கு தங்கியிருந்து செல்ல லா - கோம்பே முடிவு செய்தார். அடுத்த நாள் இந்த பிரசங்கியின் ஊழியரில் ஒருவர் மிக வேகமாக குதிரையை ஓட்டிச்சென்று, தந்தை அவர்கள் போவதற்கு*

*முன்பாகவே, அவர் செல்ல இருந்த பாதிரிமார்கள் தங்கும் இடத்திற்கு பிரசங்கியின் ஊழியர் அனுப்பப்பட்டார். தந்தை லா - கோம்பேயிடம் இந்த பிரசங்கி வந்து "உங்களிடம் கொடுத்து விடுவதற்கு கடிதம் ஒன்றுமில்லை" என்று கூறி விட்டார். தன் கருத்துக்களை முதலாவது ஜெனிவா பிஷப்புக்கு தெரிவிக்க வேண்டும் என்ற* **தீய தந்திரத்தோடு** *இந்த பிரசங்கி செயல்பட்டார் என அறிந்து, மன வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தேன்.*

*- மேடம் குயான்*

---

## சபையில் 'சுவிசேஷ' ஊழியம் மீட்கப்பட வேண்டும்!

*சபையில் உள்ள சகோதர சகோதரிகள், கர்த்தருக்குள் வளரும்படி அவர்களுடைய ஆவிக்குரிய தேவைக்கேற்ப பல்வேறு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது! புதிய ஏற்பாட்டில் "சுவிசேஷ கூட்டங்கள்" மிக முக்கியமான கூட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுவிசேஷ புத்தகங்களிலும், அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்திலும் மிக முக்கியமாகவே கருதப்படுகிறது. ஆதி சபை நாட்களின்* ***'சுவிசேஷ கூட்டம்'*** *சபையின் அடிப்படை கூட்டமாய் கருதப்பட்டது.* கி.பி. 4-ம் நூற்றாண்டு தொடங்கி சபை வளர்ச்சி குன்றிப்போன அந்நாட்களில், சுவிசேஷ கூட்டத்தின் மதிப்பு கொஞ்சம் கொஞ்சமாய் குறையத் தொடங்கியது. அந்த இடத்தில் 'ஊழிய கூட்டங்கள்' முக்கிய இடத்தை பிடிக்கத்தொடங்கியது.

**வாரத்தின் முதலாம் நாள் 'ஞாயிற்றுக்கிழமை' "பிரசங்கம் கேட்பதே" பிரபல்யமாகியது. இவ்வித மாற்றம், சபையின் தோல்வியை சுட்டிக் காட்டும் ஓர் நிரூபணமாயிருக்கிறது!**

ஓர் வலிமையான சபை வேண்டுமென்றால், சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் கூட்டங்கள் 'மீண்டுமாய் முதலிடத்திற்கு' கொண்டு வரப்பட வேண்டும். ஓர் சம்பிரயாத்திற்கு உட்பட்டு பெரும்பாலான சபைகள் சுவிசேஷ ஊழியத்தை புறக்கணித்தப்படியால், அதை 'கண்மூடித்தனமாய்' பின்பற்றாதிருக்க சபை மக்கள் ஜாக்கிரதை கொண்டிருக்க வேண்டும். பொதுவாய், அநேக கிறிஸ்தவ சபைகள் 'பிரசங்கங்களை முக்கியப்படுத்தியே' கூடிவரத் தொடங்கிவிட்டார்கள். சுவிசேஷ கூட்டங்கள் ஆதிநாட்களைப்போல் முதலிடம் பெறுவதற்கு, கிறிஸ்தவர்களின் மனக்கண்கள் திறக்கப்பட தேவன் கிருபை செய்வாராக!

'சபை மக்கள் கட்டப்படுவதற்காக' மாத்திரமே, தமது சபையின் நோக்கமாய் தேவன் வைத்திராமல், கட்டப்படுவதற்குத் தேவையான மக்களை கூட்டிச்சேர்ப்பதற்கும், தன் சபையை வைத்திருக்கிறார்.

*சபை கட்டப்படும் ஊழியத்திற்கு "சுவிசேஷ வரம் பெற்றவர்கள்" முதலிடத்தில் சொல்லப்படாவிட்டாலும், அப்போஸ்தல நடபடிகளில் தோன்றிய* **முதல் ஊழியம் 'சுவிசேஷம் அறிவிக்கப்படும்' ஊழியமாகவே** *இடம் பெற்றிருக்கிறது. சமாரியாவில் பிலிப்பு தொண்டாற்றிய சுவிசேஷ ஊழியம், அப்போஸ்தல நடபடிகள் 8-ம் அதிகாரத்தில் நாம் எல்லோரும் தெளிவாய் காணும்படி எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய சபை விருத்தியடைந்த அந்நாட்களில், சுவிசேஷ வரம்பெற்றவர்களே முதற்பங்கு வகித்தார்கள்!*

**ஆகவே, இன்றைய சம்பிரதாய கிறிஸ்தவத்தில் 'பிரசங்கம் கேட்பதற்கு மாத்திரமே' கூடி வருகிற நிலையை மாற்றி "சுவிசேஷ கூட்டங்கள்" சபையின் முக்கிய பங்காய் முதலிடம் வகித்திட நாடுவோமாக!**

*ஜனங்கள் கர்த்தரை தங்கள் இரட்சகராக விசுவாசித்தவுடன் தாங்கள் பெற்ற சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவித்து ஊழியம் செய்திட ஊக்குவிக்கப்பட வேண்டும்! அப்படியில்லாமல், அந்த புதிய விசுவாசிகள் "பிரசங்கங்கள் கேட்கும்படி" அவர்களை வலியுறுத்தி விடாமல், சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியத்தைக் கொண்டு கர்த்தருக்குப் பணிசெய்திடும் உயர்ந்த எண்ணத்தைப் பெற்றுக்கொள்ள நாம் உதவிசெய்ய வேண்டும்!*

*ஓர் சபை வலிமைப்பெற்று விளங்க, வாரத்தில் ஓர் நாளாவது சுவிசேஷ கூட்டம் நடத்துவதற்கு ஆர்வம் கொண்டிருக்க வேண்டும்! அதுபோன்ற கூட்டங்களில், உங்கள் சபையிலிருக்கும் ஒருவர் அல்லது இருவர் தாங்கள் பெற்ற இரட்சிப்பை சாட்சியாகக் கூறும்படி செய்யுங்கள்! அவர்கள் பிரசங்கம் செய்திடாமல் 'சாட்சி மாத்திரமே கூறும்படி' அந்த ஸ்தல சபையின் போதகர் வழிநடத்த வேண்டும். ஆகவே, அவருடைய சாட்சி எளிய வார்த்தைகளாக இருந்தாலும், கேட்பவருடைய உள்ளத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியும். இந்த மேன்மையான சுவிசேஷ கூட்டத்தைப் புறக்கணித்துவிட்டு, தங்கள் ஸ்தல சபைக்கு எழுப்புதல் வேண்டும் என எண்ணுவதும், ஜெபிப்பதும், பொய்யான பகற்கனவாகி விடும்!*

*- வாட்ச்மென் நீ*

---

## "பிதாவின் வேளையில் நடந்தேறுவதே" ஜெய ஜீவியம்!

*கெத்சமனேயில், இயேசு ஏற்றுக்கொண்ட அந்தப் பாத்திரம் சாத்தான் அவருக்குக் கொடுத்ததல்ல! துரோகியான யூதாஸ் அவருக்குக் கொடுத்ததும் அல்ல! அவரைப் பிடிக்கவந்த சத்துருக்களும் கொடுத்ததல்ல! தம்மைக் கைவிட்டு ஓடின சீஷர்கள் கொடுத்த*

*பாத்திரமுமல்ல!* **அன்புள்ள பிதாதாமே, தமது குமாரனுக்குக் கொடுத்த பாத்திரம்.** *"தன் பிதா தனக்குக் கசப்பான பாத்திரத்தில் பானம்பண்ண அவர் சம்மதித்ததினாலேதான்" மகா அந்தகாரமான வேளைக்குள் பிரவேசிக்கத் தம்மை இயேசு ஒப்புக்கொடுத்தார். அந்தப் பாத்திரமும், சம்பவித்த அந்த வேளையும் பிதாவின் அனுமதியில் வந்தது:*

> *அந்தப் பாத்திரத்தாலுண்டான அகோர அவஸ்தையை, அவர் தோட்டத்தில்மாத்திரம் அனுபவிப்பதாய் தோன்றினபோதிலும், பாத்திரத்தோடு சம்பந்தப்பட்ட அந்த வேளையோ, தோட்டத்திலேயே முடிந்துபோகவில்லை! அன்றிரவு முதல் பதினைந்து மணிநேரமாக அவ்வேளைக்குள்ளேயே இருந்தார். அவர் சிலுவையில் "முடிந்தது" என்று சொன்ன நிமிஷத்தில்தான் அவ்வேளையும் முடிந்தது!*

*அப்படியானால், தோட்டத்தில்மாத்திரம் அவர் அவ்வளவு அகோர அவஸ்தைப்பட்டு, தோட்டத்தை விட்டதுமுதல் சிலுவையின் மரணபரியந்தம் மகா சாந்தமாய் நடந்து கொண்டதற்குக் காரணமென்ன?* **அவர் செய்த ஜெபமே காரணம்.** *பிதா தமக்குக்கொடுத்த அந்த கசப்பான பாத்திரத்தை அவர் கண்டபோது மகா திகிலடைந்து, அந்த பாத்திரம் தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கிப்போகும்படி பிதாவை நோக்கி ஊக்கமாய் ஜெபிக்க ஆரம்பித்தார். இவ்வாறு ஜெபத்தில் அவர் காத்திருக்கையில், தாம் அந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணினாலொழிய அது தம்மை விட்டு நீங்கமாட்டாதென்று பிதா அவருக்கு அறிவித்தபோது: "என் சித்தப்படியல்ல பிதாவே, உம்முடைய சித்தப்படியே ஆகட்டும்" என்று பாத்திரத்தை ஏற்றுக்கொண்டார். அவ்வாறு அவர் ஏற்றுக்கொண்டவுடனே அவர் ஆத்துமாவைச் சூழ்ந்திருந்த வியாகுலமும், திகிலும், துக்கமும், போராட்டமும் நீங்கி, மிகுந்த அமைதலும் தைரியமும் அவருக்குள் வந்தது!*

> **பாத்திரம் அவரைவிட்டு நீங்கிப்போனதினால் அல்ல, அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்படி தமது சித்தத்தை பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தினதினாலேயே, மிகுந்த அமைதலும் சமாதானமும் அவருக்குக் கிடைத்தது!**

*அவரே தோட்டத்துக்கு வெளியே வந்து, சத்துருக்களுக்கு எதிர்கொண்டுபோய், தம்மை அவர்கள் கைகளில் ஒப்புவிக்கிறார்! பேதுரு பட்டயத்தை உபயோகித்தபோது, அவரைத்தடுத்து "என் பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்றார். அதுமுதல், சிலுவையின் மரணபரியந்தம் சத்துருக்கள் அவரை எவ்வளவோ பாடுகள்படுத்திக் கொடூரமாக நடத்தினபோதிலும், அவர் சற்றும் கலங்கவில்லை! கண்ணீர் விட்டழவில்லை!*

இரக்கத்துக்காகக் கெஞ்சவில்லை! தோட்டத்தில் கண்ட பயங்கரமான போராட்டத்தையும் தத்தளிப்பையும் கண்டு, பின்வாங்கவில்லை!

**அவர் குற்றவாளிபோல் அல்ல, ஓர் இராஜனாகவே விளங்கினார். அவர்கள் அவரைக் கைதியாக்கினாலும், அவர் நிற்கிற மாதிரியையும் பேசும் வார்த்தைகளையும் கவனிக்கும்போது, அவர்கள்தான் கைதிகள் போலவும், அவர் நியாயாதிபதி போலவும் தோன்றியது!**

இயேசுவின் அடிச்சுவடில் செல்லும் யாவருக்கும் இந்த பாக்கியம் உரியது ஆகும். ஒவ்வொரு தீங்கு நேரத்திலும் 1) பிதா எனக்குத் தந்த பாத்திரமென்றும். 2) 'பிதாவின் வேளை' அறிந்து, சிலுவைக்குத் தன்னை ஒப்புக்கொடுப்பதும், இயேசு பெற்ற ஜெயத்தை, நாமும் பெற்றிட, மெய்யாகவே வழிவகுக்கும்!

- பரமானந்தம் ஐயர்

---

## பரிசுத்த ஜீவியம், நம் ஒருவருக்கும் தூரமானதல்ல!

நாம் பாவிகளாயிருந்து இரட்சிக்கப்பட்டவுடன், உடனடியாக நாம் நாட வேண்டியது பரிசுத்த ஜீவியமேயாகும். நாம் கற்றுக்கொள்ளாமலே, பாவ ஜீவியம் தானாகவே வளரும்! ஆனால் பரிசுத்த ஜீவியமோ, நாம் கற்றுக்கொண்டால் மாத்திரமே வளர முடியும். அவ்வாறு பரிசுத்தத்தைக் கற்றுக்கொள்ள, இரட்சிக்கப்பட்ட ஒருவருக்கு தேவையாயிருப்பது பரிசுத்த ஜீவியத்தின் மீது கொண்ட வாஞ்சையேயாகும்! தானியேல் என்ற ஓர் யூத வாலிபன், நாடு கடத்தப்பட்டு புறஜாதியார் தேசத்திற்கு கொண்டு போகப்பட்டார். அங்கு, வேதம் கற்றுத்தந்த 'தீட்டுப்படுத்தும்' உணவைப் புசிக்கலாகாது என்ற கட்டளையை மீறுவதற்குரிய சோதனை ஏற்பட்டது. அச்சமயத்தில், இந்த தானியேல் என்ற வாலிபன், "பரிசுத்தத்திற்கு மாறாகத் **தன்னை தீட்டுப்படுத்தக் கூடாது** என்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டான்" (தானி.1:8).

பரிசுத்த ஜீவியத்திற்கென்று, தானியேல் துணிவான தீர்மானம் எடுத்தபடியால், தேவன் அவனது தீர்மானத்தை வாய்க்கச் செய்தார். ஆகவே, உடனடியாக அடுத்த வசனத்தில், தானியேல் உணவினால் தன்னை தீட்டுப்படுத்தாதபடியிருந்திட "பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி" செய்தார்.

**நீங்கள் பரிசுத்த ஜீவியத்திற்கு வாஞ்சைகொண்டிருந்து 'தீர்மானம் எடுக்கும் பங்கை' தெரிந்து கொண்டால் மாத்திரமே, அதை நிறைவேற்றும்படியான பங்கை தேவன் செய்திடுவார்! எந்தவொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் 'அந்த மனிதன் இல்லாமல்' தேவன் தானாக செயல்பட மாட்டார்!**

*பாவ வாழ்க்கையினால் தோல்வியின் ஜீவியத்திலிருக்கும் நீங்கள், உங்களை தேவனுடைய சமூகத்தில் ஆராய்ந்து, தேவன் நினைவுபடுத்தும் பாவங்களை வரிசைப்படுத்தி எழுதுங்கள்! "ஓ தேவனே, இனிமுதற்கொண்டு இவ்வித பாவ வாழ்க்கையினால் நான் இனி என்னை கறைப்படுத்திக்கொள்ள மாட்டேன்" என ஜெபத்துடன் தீர்மானம் எடுங்கள். 'பரிசுத்தம்' உங்கள் இருதயத்திற்கு சம்பந்தம் கொண்டது. உங்கள் பாவ வாழ்க்கைக்கும் தோல்விக்கும், நீங்கள் தான் காரணமேயல்லாமல் தேவன் காரணம் அல்ல! அல்லது வேறு யாதொரு மானிடனும் காரணம் அல்ல!*

*தன் சொந்த இருதயமே பாவ ஜீவியத்திற்கு காரணம் என உணர்வடையும் யாவருக்கும், தேவன் உதவி செய்து 'பரிசுத்த ஜீவியத்தை' பரிசாக வழங்குவார்! ஏனெனில் யோபு 14:4-ம் வசனத்தில் வாசிக்கிறபடி "அசுத்தமானதிலிருந்து சுத்தமானதை பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை" என்றே வாசிக்கிறோம். ஆனால், பரிசுத்த வாஞ்சையும், அதற்குரிய உறுதியான தீர்மானமும் எடுத்துக்கொண்ட யாவருக்கும்* **'அசுத்தம் நீக்கி பரிசுத்தம் பெற்றிட' தேவன் வல்லமையாய் கிரியை செய்வார்.** *இதை ரோமர்.11:16 கூறுப்பிடும்போது "வேர் பரிசுத்தமாய் இருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்" என கூறுவதைப் பாருங்கள்.*

*அதேபோல யாக்கோபு 3:11 கூறும்போது "ஒரே ஊற்றிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?" என கேட்டார். 'ஊற்று' சரியாய் இருந்தால், அதிலிருந்து சுரக்கும் நீரும் தித்திப்பாயிருக்கும்! 'ஊற்று' சரியில்லையென்றால் அதிலிருந்து கசப்பான நீரே சுரக்கும்! ஆகவே பரிசுத்தத்தின் மீது வாஞ்சையும், அதை கற்றுக்கொள்ள வேண்டிய தீர்மானமும்,* **உங்கள் இருதயத்தை** *நல்ல ஊற்றாய் மாற்றிவிட முடியும். இதை இயேசு தன் மலைப்பிரசங்கத்தில் குறிப்பிட்டு* **"நீதியின்மேல் பசிதாகம் உள்ளவர்கள்** *பாக்கியவான்கள்! அவர்கள் திருப்தியடைவார்கள்!" என கூறினார் (மத்.5:6). பரிசுத்தவான் A.W. டோசர் கூறும்போது "ஒவ்வொரு மனிதனும் அவனவன் விரும்பும் அளவின்படியே பரிசுத்தமாய் வாழ முடியும்" என கூறினார்.*

*ஆகவே, இனியும் அசுத்த வாழ்வை விரும்பாமல், பரிசுத்த ஜீவியத்தை வாஞ்சித்து நாடுங்கள்! மேலும், தானியேலைப் போல உறுதியான தீர்மானம் எடுங்கள்! தானியேலின் தேவன் நம் தேவன். தானியேலின் பரிசுத்த வாழ்விற்கு கைகொடுத்த தேவன், நிச்சயமாய் நமக்கும் கைகொடுத்து பரிசுத்த ஜீவியம் செய்ய நடத்துவார்!*

*- R.ஸ்டான்லி BYM*

## 'பக்தியுள்ளவர்களை கர்த்தர் காப்பார்' வாக்குதத்தம்,அழிவதில்லை!

"**ப**க்தியுள்ளவர்களை எப்படி காப்பது? என்று கர்த்தர் அறிந்திருக்கிறார்!" என்றே 2பேதுரு 2:9 கூறுகிறது. இதை விளக்கும்படியான 5-ம் வசனத்தில், பூர்வ முழு உலகத்திலும் **நீதிமானாகிய நோவா குடும்பத்தின் வெறும் 8-பேரை** "ஜலப்பிரளயத்தில்" கர்த்தர் காப்பாற்றினார் என்றும்! 6 முதல் 8-ம் வசனத்தில், சோதோம் கொமோரா முழு பட்டணமும் "அக்கினியில் அழிந்தபோது" **நீதிமானாகிய ஒரே ஒரு லோத்தை** கர்த்தர் எப்படி காப்பாற்றினார் என்றும்! கூறியபிறகே, 9-ம் வசனத்தில் 'பக்தியுள்ள தம்முடையவர்களை' எப்படி காப்பது என கர்த்தர் அறிந்திருக்கிறார்! என்ற வாக்குதத்தம் நம் யாவரையும் பெலப்படுத்தி ஊக்குவிக்கிறது!

**ஆகவே, தெய்வ பயத்துடன் பக்தியான வாழ்க்கை வாழும் உங்களுக்கு திடீரென்று 'வெள்ளம்' சூழ்ந்தால் என்ன? அல்லது 'அக்கினி பிரவாகம்' தாக்கினால் என்ன? அன்று நோவா குடும்பத்தை 'ஜலப்பிரளயத்திற்கும்' லோத்தை 'அக்கினிக்கும்' காத்த தேவன், உண்மையுள்ளவராய் நின்று உங்களைக் காப்பார் என்பதை திடமாய் நம்பி நிலைநிற்கக்கடவோம்!**

இன்று சோகம் என்னவென்றால், கர்த்தருக்கு பக்தியாய் வாழ்ந்து அவரது நாமத்திற்கு புகழ்சேர்த்த 'சில பக்தியுள்ளவர்கள்' அல்லது பக்தியுள்ள குடும்பங்கள் சங்.12:1 கூறுகிறபடி பெருவெள்ள துன்பத்தில், அக்கினிமய சோதனையில், சோர்ந்து அவரை நம்புவதிலிருந்துவிலகி, 'அற்றுப்போவதையும்!' மனுபுத்திரரில் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்த அவர்கள் 'மறைந்துபோவதையும்!' கண்டு...."கர்த்தாவே உதவும்! இது வேதனையன்றோ?" என்றே சங்கீதக்காரன் இவ்வசனத்தில் புலம்பினார்! அதுஏனென்றால், தாவீது தன் சொந்த ஜீவியத்தில், கர்த்தர் தன்னை பாதுகாத்ததை 5-ம் வசனத்தில் கூறும்போது "**உன் மேல் சீறுகிறவர்களுக்கு, உன்னைக் காத்து சுகமாயிருக்கப்பண்ணுவேன்**" என கர்த்தர் தனக்கு வாக்கு கொடுத்ததையும்! 6,7-ம் வசனங்களில் அந்த வாக்கை "வெள்ளிக் குகையின் அக்கினியில் ஏழுதரம் புடமிட்டு" தன் வாக்குதத்தத்தில் உண்மையுள்ளவராயிருந்து, தன்னை காப்பாற்றியதையும் சாட்சியாகக் கூறினார்!

**அப்படியிருக்க, உபத்திரவத்தில் பக்தி வாழ்வை இழப்பதும், கர்த்தரைப் பற்றிய உத்தம ஜீவியத்தில் 'காணப்படாமல் போவதும்' நியாயம்தானோ?**

*நோவா, லோத்து, தாவீது* ஆகிய தாசர்களை காத்த தேவன், நம் தேவன் அன்றோ? சோதனையின் உச்சத்தில், தள்ளாடும் உங்கள் கால்களைப் பெலப்படுத்துங்கள், பக்தியுள்ள நீங்கள் 'காணாமல்' போய்விடாதீர்கள்!

- T.ரத்தினகுமார்

## கிறிஸ்துவின் உண்மை ஊழியன்,
# பரமானந்தம் ஐயர்!



மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 'பந்தல்புளி' கிராமத்தில் பிறந்து, சங்கரபாண்டியன் என்ற பெயரில், 1873-ம் ஆண்டு பிறந்தவர்தான் பரமானந்தம் ஐயர். அவர் தந்தை ராமசாமி, ஞானஸ்நானத்தில் சுவாமிதாஸ் என்று பெயரிடப்பட்டார். அவருடைய தாய் பேச்சியம்மை, ஞானம்மாள் என்று பெயரிடப்பட்டார். ஞானஸ்நானம் கொடுத்த வேதநாயகம் ஐயரவர்கள், சங்கரபாண்டியனுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, பரமானந்தம் என பெயரிட்டார். ஆகிலும், 23-வயது வரை 'உலகானந்தத்தில் வாழ்ந்த அவர்' கர்த்தரை தனது சொந்தமாக்கின பிறகுதான், பரமானந்தம் என்னும் பெயர் அவருக்கு நிறைவேறினது.

மிஷன் பள்ளியில் ஜிம்னாஸ்டிக் ஆசிரியராயிருந்த பரமானந்தம், தன் மாணாக்கர்களுக்கு எழுத்து வேலை கொடுத்து அமர்ந்திருந்த வேளையில், ஆண்டவருடைய சத்தம் அவருடைய இருதயத்தில் ஒலித்தது: "நான் உன்னிடத்தில் அன்புகூர்ந்து, உனக்காக என் உயிரைக் கொடுத்தேன். ஆனால், நீயோ என்னிடத்தில் அன்பாய் இல்லை" என பேசினார். தேவனுடைய குரலைக் கேட்ட பரமானந்தம் பக்கத்து அறைக்கு பிரவேசித்து முகங்குப்புற விழுந்து அழுதார். "ஆண்டவரே, இந்த நிமிஷம் முதல் நான் உமக்கே சொந்தம் என்பதை எழுதிக்கொள்ளும்" என்று கூறி கண்ணீரை துடைத்து வகுப்புக்குத் திரும்பினார். அதுமுதல், கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியை, அந்த ஊரில் உள்ள அநேகருக்கு கூறினார். கூட்டம் கூட்டமாக, ஜனங்கள் பரமானந்தம் வீட்டிற்குச் சென்று, அவரது சாட்சியைக் கேட்டு மனந்திரும்பினார்கள். ஆத்திரமடைந்த குருமார்கள், அவரது மிஷன் வேலையை ரத்துசெய்து வெற்றி கண்டார்கள். அவ்வேளையில், பரமானந்தம், "எனக்கு வேலை போனாலும், நான் கிறிஸ்துவை சாட்சி பகராமல் இருக்க முடியாது. கர்த்தருக்குள் எனது மகிழ்ச்சியை, ஒருவரும் பறிக்க இயலாது" என கூறி சுற்றிலும் உள்ள கிராமங்களுக்குச் சென்று பிரசங்கித்தார். மெய்ஞானபுரத்தில் இருந்த பெரிய ஆலயத்தில் அவரை அழைத்து பிரசங்கிக்கச் செய்தார்கள். திரளாய் வந்த ஜனங்கள் "நம்முடைய ஜிம்னாஸ்டிக் ஆசிரியர் எவ்வளவாய் கிறிஸ்துவை பக்தியுடன் பிரசங்கிக்கிறார்" என வியந்தார்கள். இவ்வாறாக, கர்த்தர் அவரோடிருந்து, அவர் மேற்கொண்ட முழுநேர ஊழியத்தை ஊக்குவித்தார்.

சென்னையில், ராயபுரம் சபை போதகராய் பொறுப்பேற்று, வல்லமையாய் ஊழியம் செய்தார். தன் ஊழியத்தின் வல்லமைக்கு இரகசியம் "அபிஷேகமேயன்றி" யாதொரு மேன்மையும் இல்லை என, உறுதிபட கூறினார். தன் ஊழியத்தில், அபிஷேகத்தின் வல்லமையோடு "இரட்சிக்கப்பட்டேன் என கூறிக்கொண்டு, இரட்சிக்கப்படாமலே சபையில் அமர்ந்திருப்பவர்கள் மூலமாக, கர்த்தரின் நாமம் இன்று தூஷிக்கப்படுகிறது! நமது ஜீவியம் கிறிஸ்துவை வெளிப்படுத்தும் வெளிச்சமாகவும், கனிகள் நிறைந்ததாயும் இருக்க வேண்டும்" என கண்டித்துப் பேசுவார். அவருடைய கண்டிப்பான பிரசங்கத்தி னிமித்தம், ஏராளமான துன்பங்களையும், பொய்குற்றச்சாட்டுகளையும் சந்தித்தார். சிறந்த ஆவிக்குரிய 11-புத்தகங்களை எழுதினார். அவை அனைத்தும் இன்றும் பல்லாயிரக்கணக்கான மக்களை ஆசீர்வதிப்பதாக உள்ளது.

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## ஓ வாலிபனே, உன் இரட்சிப்பை இன்றே நிச்சயப்படுத்துவாயாக!

**18**-ம் நூற்றாண்டின் இங்கிலாந்து தேசத்தை சார்ந்த தலைசிறந்த மிஷனெரி யோனாத்தான் கோபோர்த் அவர்களின் தாய் ரோசலிண்ட் அம்மையார், தான் இரட்சிக்கப்பட்ட விதத்தை கீழ்கண்டவாறு எழுதினார். நான் 12வயது சிறுமியாக இருந்தபோது ஆல்பிரட் சந்தாம் என்ற பிரசங்கியார் யோவான் 3:16-ம் வசனத்தைக் கூறி, ஒரு சுவிசேஷ கூட்டத்தில் பிரசங்கித்தார். தேவனுடைய அன்பின் ஆழம், நீளம், அகலம், உயரத்தின் விசித்திர தேவ அன்பை மிகுந்த உணர்ச்சியோடும், தேவ அன்பின் பெருக்கத்தோடும் அவர் விளக்கிக் காண்பித்துக் கொண்டிருந்த வேளையில், "நான் என்னை முற்றுமாக ஆண்டவர் இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து, எனது பரம எஜமானரின் அடிமையானேன்."

கூட்டத்திலிருந்து நான் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது "கிறிஸ்து இரட்சகர் உன்னை தனது சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டார் என்று நம்பிக் கொண்டிருப்பது எத்தனை முட்டாள்தனமானது" என்று சாத்தான் திரும்பத் திரும்ப என் காதிலே பேசிக்கொண்டே இருந்தான். அடுத்த நாள் அதிகாலை எனது பாட்டியம்மா, எனக்கு இங்கிலாந்து தேசத்திலே கொடுத்த எனது வேதாகமத்தின் பக்கங்களை புரட்டினவளாக "ஆண்டவரே, நீர் என்னை உமது பிள்ளையாக ஏற்றுக்கொண்டதின் நிச்சயத்தை உமது வசனத்தின் மூலமாக உறுதி செய்யும்" என்று ஜெபித்தேன். "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37) என்ற வசனத்தை தேவன் எனக்கு கொடுத்து என்னை களிகூரப்பண்ணினார். மேற்குறிப்பிட்ட அந்த தேவ வசனம், எனது எல்லா சந்தேகத்தையும் என்னிலிருந்து விரட்டி அடித்தது!

பின்பு சாத்தான் "நீ ஆண்டவருடைய பிள்ளையாக இருப்பதற்கு முற்றும் தகுதியற்ற மிகவும் சிறு பிள்ளை" என்று எனது காதிற்குள் திரும்பவும் வந்து பேசி என்னை குழப்பமடையச் செய்தான். நான் திரும்பவும் ஆண்டவருடைய வேதத்திற்கே சென்று, அதின் பக்கங்களைப் புரட்டி, கர்த்தர் இது விஷயத்திலும் எனக்கு உதவி செய்ய அவரை நோக்கிக் கெஞ்சினேன். "அதிகாலையில் (சீக்கிரமே) என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" (நீதி.8:17) என்ற தேவ வசனத்தை கர்த்தர் எனக்குக் கொடுத்து என்னை அமரப்பண்ணினார். மேற்கண்ட இரு வசனங்களும் தேவன் என்னைத் தமது சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டார் என்ற எனது விசுவாசத்தை ஆழமாக உறுதிப்படுத்தியது. அதன்பின்பு, எனக்கு எந்த ஒரு சந்தேகமும், தடுமாற்றமும் கடைசி வரை ஏற்படவே இல்லை. அன்பான வாலிபர்களே, உங்கள் இரட்சிப்பையும், அதன் உறுதியையும் இன்றே துரிதமாய் பெற்றிடுங்கள், காலம் மிகக் குறுகியது!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**